---

*நீதிச்சேவை ஆணைக்குழு*

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2023**

1. 2088/ 26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/ 26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் "உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்" நியமிக்கப்படுவார்.

2.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு அமைவாக பிரிவு 12.18 இன் பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும்/அல்லது எதிர் காலத்தில் வெளியிடப்படவுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைவாக உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய மற்றைய அரச மொழி தொடர்பிலான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. **சம்பளம்** : 03/ 2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதின்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய SL 1-2016 (மாதாந்தம்) ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (இப்பதவிக்குரிய ஆரம்ப சம்பளம் SL 1-2016 இற்குரிய சம்பள அளவுக்குரிய 12 ஆவது படிநிலையாகும். அதனடிப்படையில் ஆரம்ப சம்பளம் ரூபா 62,595.00) ஆகும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 2023.09.22 ஆந் திகதிக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளராக இருத்தல் அல்லது இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் ஏழு வருடங்கள் உயிர்ப்பான, திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) 07 வருடங்களுக்கு குறையாமல் செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(i) யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் சட்டத்தரணியாக பதவிநிலை உத்தியோகம் ஒன்றில் அல்லது சட்டத் துறை சார் தகைமையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சட்டம் தொடர்பான ஆசிரியராக சேவையாற்றிய காலப்பகுதி செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற காலப்பகுதியாக கருதப்படும்.

(ii) தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வய தெல்லை பொருந்தாது.

(iii) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணத்தின் 13.5 பிரகாரம் "திருப்திகரமான சேவைக் காலம்" என்பது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் வினைத்திறனுடனும் ஊக்கத்துடனும் பணியாற்றுவதன் மூலமும் சித்தி பெற வேண்டிய வினைத் திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறுவதன் மூலமும், பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து கொள்வதன் மூலமும், அக்காலப்பகுதியில் ஈட்டிக்கொள்ள வேண்டிய சகல சம்பளவேற்றங்களையும் பெற்று, தண்டனைக்குரிய குற்றம் எதனையும் புரியாமல் சேவையாற்றும் காலப்பகுதியாகும்.

(உ) சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றப் போதுமான உடல், உள ரீதியிலான தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பதவிக்கு பொருத்தமான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. மேலே 05 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் ஆயின் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட வேலைபார்க்கும் காலத்திற்கு உட்படுவார். 05 (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது நியமனம் பெற்ற பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

9. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.-

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

10. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பப்படிவ கட்டணம் ரூபா 500.00. "நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர், முகவரி எழுதப்பட்ட $9 \times 4$ அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ள முடியும். பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பூர்த்தி செய்யும் போது பற்றுச்சீட்டில் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2023.10.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

11. (அ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு

ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. 01 தொடக்கம் 11 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம்/ பிரிவுகளில் விளக்கமளிக்கப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தீர்மானிப்பார்.

13. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2023, செத்தெம்பர் 13.

09-415